**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 293/2017 வா.சா.1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அருள் | வயது | : 55 |
| த.பெ | : வரதராஜன் | தாலுக்கா : | |
| கிராமம் | : தற்போது சென்னை | தொழில் : ஆசிரியர் | |

**<u>17.06.2025 – வா.சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>**

1. என்னுடைய தாய் பெயர் உண்ணாமலை. இவ்வழக்கில் 1ம் வாதி ஆவார். எனக்கு அருணாச்சலம் மனைவி முனியம்மாள் மற்றும் கோவிந்தசாமி மனைவி ராஜம்மாள் ஆகியோர்களை தெரியும். சண்முகம் முதலி, ஆறுமுக முதலி மற்றும் ஜானகி முதலி ஆகியோரை தெரியும். முனியம்மாள் மற்றும் ராஜம்மாள் ஆகியோர்கள் பெயரில் உள்ள சொத்துக்களை 1978 ல் 75 செண்ட்டை சின்னப்ப மந்திரிக்கு அவர்களுக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1992 ல் சண்முக முதலி, ஆறுமுக முதலி, ஜானகி முதலி ஆகியோர்கள் சேர்ந்து சின்னப்ப மந்திரிக்கு (பிரதிவாதியின் தந்தை) அவர்களுக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். மேற்படி கிரையம் கொடுத்த சொத்தை தான் பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை.

2. தாவா சொத்தை தான் பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து தான் 1992 ல் சின்னப்ப மந்திரிக்கு கிரையம் கொடுத்த சொத்து என்றால் என்னுடைய சொத்து. மேற்படி கிரையம் கொடுத்த சொத்து தான் தாவா சொத்தா என்றால் சரிதான். நான் தாவா சொத்து பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்றது என்று கூறுகிறேன், பாகப்பிரிவினையை நான் மறுப்பதால் மற்ற பாகஸ்தர்கள் அவர்களை இந்த வழக்கில் இணைத்துள்ளேனா என்றால் இல்லை. 1992 ல் சண்முக முதலி ஆகியோர்கள் சின்னப்ப மந்திரிக்கு கொடுத்த கிரையப்பத்திரத்தில் உள்ள சொத்துக்களை தான் நான் தாவா சொத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் என் தந்தை வரதராஜ் அவர்களின் தாய் கமலம்மாள் அவர்கள் மூலம் பாத்தியப்பட்டது.

3. என் தந்தையின் உடன்பிறந்தவர்கள் 3 பேர் மொத்தமாக 4 பேர் மேற்படி பங்குதாரர்கள் ஆவார்கள். மேற்படி சொத்து கமலம்மாள் சொத்து கிடையாது என்றும், அது முனியம்மாள் மற்றும் ராஜம்மாள் அவர்களின் சொத்து என்றால் முனியம்மாள் அவர்கள் குழந்தை இல்லை என்பதால்

கமலம்மாள் மற்றும் ராஜம்மாள் குழந்தைகளுக்கு அவர்களின் தாய்வழி சொத்தை எழுதிவைத்தார்கள். ஏற்கனவே 1978 ல் முனியம்மாள், ராஜம்மாள் அவர்கள் பிரதிவாதியின் தந்தைக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள். அதை தான் நான் தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியாது. மேற்படி கிரையம் கொடுத்த சொத்தை சேர்த்து நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டதால், பாகப்பத்திரம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் மேற்படி கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-B.Salma,

District Munsif,

Polur.